


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






### கோடை விடுமுறை கால அவசர வழக்குகளை விசாரிக்க 29 நீதிபதிகள்

# நியமனம்

## சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளையில் பொறுப்புத் தலைமை நீதிபதி டி.ராஜா, நீதிபதிகள் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, ஜெ.சத்யநாராயண பிரசாத், ஜி.கே.இளந்திரையன் உள்ளிட்ட நீதிபதிகள் விசாரிப்பார்கள் என அறிவிப்பு

**சென்னை, ஏப். 29-**

**கோடை விடுமுறை காலத்தில் தாக்கல் செய்யப்படும் அவசர வழக்குகளை பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா உள்ளிட்ட 29 நீதிபதிகள் விசாரிப்பார்கள் என சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.**



சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் பி.தனபால் வெளியிட்டுள்ள அறிவிப்பில், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மே முதல் வாரம் மட்டும் செவ்வாய் மற்றும் புதன்கிழமை மனு தாக்கல் செய்யலாம். அவை வியாழன் மற்றும் வெள்ளி கிழமையில் விசாரிக்கப்படும்.

மே மாதத்தின் பிற வாரங்களில் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் மனுத் தாக்கல் செய்யலாம். அந்த மனுக்கள் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் விசாரிக்கப்படும்.

கோடை விடுமுறை காலத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தில் பொறுப்புத் தலைமை நீதிபதி டி.ராஜா, நீதிபதிகள் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, ஜெ.சத்யநாராயண பிரசாத், ஜி.கே. இளந்திரையன், எஸ். சௌந்தர், அனிதா சுமந்த், எம்.நிர்மல்குமார், சுந்தர் மோகன், பி.பி. பாலாஜி, கே.ஜி.திலகவதி, சி.வி.கார்த்திகேயன், செந்தில்குமார் ராமமூர்த்தி, ஏ.ஏ.நக்கீரன், கே.குமரேஷ்பாபு, முகமது சபீக், பி.புகழேந்தி, சத்திகுமார் சுகுமார குருப், வி லட்சுமிநாராயணன் ஆகியோர் விசாரிக்க உள்ளனர்.

இதேபோல, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பொறுப்புத் தலைமை நீதிபதி டி.ராஜா, நீதிபதிகள் எம்.தண்டபாணி, ஆர்.விஜயகுமார், ஆர்.தாரணி, ஜி.ஆர். சுவாமிநாதன், எஸ்.ஸ்ரீமதி, ஆர். கலைமதி, என்.மாலா, டி.வி.தமிழ்ச்செல்வி, எம்.எஸ்.ரமேஷ், பி.டி.ஆஷா, பி.வடமலை ஆகியோர் விசாரிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக விடுமுறை கால அமர்வுகளில் தலைமை நீதிபதியாகஇருப்பவர்கள் வழக்குகளை விசாரிக்காமல், நிர்வாக பணிகளில் மட்டுமே ஈடுபடுவது வழக்கம். ஆனால் கடந்த 2020ம் ஆண்டு கரோனா ஊரடங்கு காலத்தில் அமைக்கப்பட்ட கோடைகால அமர்வுகளில், கரோனா சிகிச்சை மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான வசதிகள் குறித்த வழக்குகள் அப்போதைய தலைமை நீதிபதியாக இருந்த சஞ்ஜிப் பானர்ஜி தலைமையிலான அமர்வே விசாரித்தது.

இந்நிலையில், தற்போதைய பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா மே 24ம் தேதி ஓய்வுபெறவுள்ள நிலையில், கோடை கால அமர்வுகளில் சக நீதிபதியுடன் சேர்ந்து அவசர வழக்குகளை விசாரிக்க உள்ளார். அதன்படி மே 15 முதல் 21ஆம் தேதி வரை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதி என்.மாலா அடங்கிய அமர்விலும், மே 22, 23, 24 ஆகிய தேதிகளில் சென்னையில் நீதிபதி முகமது சபீக் அடங்கிய அமர்விலும் வழக்குகளை விசாரிக்க உள்ளார்.

### கிண்டி மருத்துவமனையை திறந்து வைக்க

# குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஜூன் 5–ல் தமிழகம் வருகை

சென்னை , ஏப். 29-

முதல்வர் ஸ்டாலினின் அழைப்பை ஏற்று, சென்னை - கிண்டியில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையை ஜூன் மாதம் 5-ம் தேதி குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு திறந்து வைக்க இருக்கிறார்.



இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை டெல்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் சந்தித்து, சென்னை - கிண்டியில் கட்டப்பட்டுள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை திறந்து வைத்திட அழைப்பு விடுத்தார்.

முன்னதாக, மறைந்த முன்னாள் கருணாநிதியின் 97-வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக முதல்வர், "சென்னை பெருநகரத்தில் உள்ள கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்" என கடந்த 2021ம் ஆண்டு ஜூன் 3-ம் தேதி அறிவித்தார்.

சென்னை, கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 1,000 படுக்கைகளுடன் கூடிய, சுமார் 51,429 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 6 மேல் தளங்களுடன் ரூ.230 கோடி செலவில் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையிலும், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு தொடக்க விழாவினை ஒட்டியும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை இந்த விழாக்களில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார்.

முதல்வரின் அழைப்பினை குடியரசுத் தலைவர் ஜூன் மாதம் 5-ம் தேதி சென்னை, கிண்டியில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை திறப்பு விழா மற்றும் நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறவுள்ள கருணாநிதியின் நூற்றாண்டு தொடக்க விழா ஆகியவற்றில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு.சின்னப்பா முதலாம் ஆண்டு இரத்ததான முகாம் நேற்று நடைபெற்றது





**புதுக்கோட்டை , ஏப். 29-**

புதுக்கோட்டை பேக்கரிமஹராஜ்நிறுவனர் அறமனச்செம்மல் சீனு.சின்னப்பா அவர்களுடைய முதலாம் ஆண்டு நினைவு தினத்தை அனுசரிக்கும் விதமாக பல்கலைத் திறன் போட்டிகள், யோகாசனப் போட்டி, இரத்ததான முகாம், சிலம்பம், கராத்தே போட்டிகள், கவியரங்கம், பரிசளிப்பு விழா என ஐந்து நாள் நிகழ்வின் துவக்க விழா சின்னப்பா நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் புதன்கிழமை தொடங்கியது.

மூன்றாம் நாள் நிகழ்வாக மாபெரும் இரத்ததான முகாம் சின்னப்பா நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் நடைபெற்றது. குருதிக் கூடு, ஜேசிஐ புதுக்கோட்டைசென்ட்ரல், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி ,ஆத்மா அகாடமிஇணைந்து நடத்திய இம்முகாமினை புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையின் மேனாள்தலைமைமருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர் எட்வின், குழந்தைகள் நல மருத்துவர் ச.ராமதாஸ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இரத்த வங்கி மருத்துவ அதிகாரி மருத்துவர் கிஷோர்குமார் தலைமையில் இரத்த வங்கி மருந்துவர்கள், செவிலியர்கள் கலந்துகொண்டனர்.சிறப்பு அழைப்பாளர்களாக வாசகர் பேரவை செயலாளர் பேராசிரியர் சா.விஸ்வநாதன், நகர்மன்ற உறுப்பினர் சா.மூர்த்தி, மரம் நண்பர்கள் செயலாளர் பழ.கண்ணன், ஜேசிஐ முன்னாள் மண்டலச் செயலாளர் இராம. லெட்சுமணன், ஆறுமுகம், குருதிக் கூடு இரத்த தான அமைப்பின் நிறுவனர்கள் சுப.முத்துப்பழம்பதி, உடற்கல்வி ஆசிரியர் முத்துராமலிங்கம், ஜேசிஐ புதுக்கோட்டை சென்ட்ரல் தலைவர் கஜேந்திரன், செயலாளர் ரமேஷ், நேரு யுவகேந்திரா உதவி திட்ட அலுவளர் இரா.நமச்சிவாயம், மாவட்ட குழந்தைகள் நலக்குழுமத்தின் தலைவர் சதாசிவம், கருணாகரன், முருகபாரதி, ஆத்மா அகாடமி நிறுவனர் யோகா ரெ.பாண்டியன், செயலாளர் புவனேஸ்வரி பாண்டியன், ஸ்ரீவெங்கடேஸ்வரா பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பேக்கரி மஹராஜ் பணியாளர்கள் மற்றும் இரத்த கொடையாளர்கள் நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தார்கள் முன்னதாக அறமனச்செம்மல் சீனு. சின்னப்பா அவர்களின் உருவப்படத்திற்கு கலந்து கொண்ட அனைவரும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

# இந்தியப் பொருளாதாரம் இந்த நிதியாண்டில் 5.9% வளரும் ஐஎம்எஃப் கணிப்பு

புதுடெல்லி , ஏப். 29-

நடப்பு நிதி ஆண்டில் இந்திய பொருளாதாரம் 5.90% வளர்ச்சி காணும் என்றும், இதன் மூலம் உலகில் வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா திகழும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் பொருளாதார நிலை குறித்து கணிக்கும் சர்வதேச நாணய நிதியம்(ஐஎம்எஃப்), அது குறித்த தனது சமீபத்திய அறிக்கையை கடந்த 11-ம் தேதி வெளியிட்டது. அதன்படி, நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.9 சதவீதமாகஇருக்கும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சர்வதேச அளவில் நிதித்துறையில் ஏற்பட்டுள்ள கொதிநிலை, பணவீக்கம், ரஷ்யா- உக்ரைன்போர், தொடரும் கரோனா தாக்கம் ஆகியவை பல நாடுகளின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்கதாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றுக்கு மத்தியில், இந்திய பொருளாதாரம் நடப்பு நிதி ஆண்டில் 5.9 சதவீதம் வளர்ச்சி காண இருப்பதன் மூலம், உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியப் பொருளாதாரம் இருக்கும்" என தெரிவித்துள்ள ஐஎம்எஃப், சவால்களுக்கு மத்தியில் நம்பிக்கை தரும் ஒளியாக இந்தியா திகழ்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்த ஆண்டில், உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2.8 சதவீதமாக இருக்கும் என்றும், அடுத்த ஆண்டுக்கான உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 3 சதவீதமாக இருக்கும் என்றும் ஐஎம்எஃப் தெரிவித்துள்ளது.



"இந்தியா மேற்கொண்ட டிஜிட்டல்மயமாக்கம், கரோனா காலத்தில் சவால்களை எதிர்கொள்வதற்கு பெரிதும் உதவியது என்றாலும், அது மட்டுமே அதன் வளர்ச்சிக்குக் காரணம் என கூற முடியாது. வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கியது, வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்தது ஆகியவையும்இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணம்" என்று ஐஎம்எஃப்-ன் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டாலினா ஜார்ஜிவா தெரிவித்துள்ளார். மேலும் அவர், சர்வதேச பொருளாதாரத்தில் நம்பிக்கை தரும் ஒளிப்புள்ளியாக திகழும் இந்தியா, 2023ம் ஆண்டுக்கான உலக பொருளாதார வளர்ச்சியில் 15 சதவீத பங்கினை வகிக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் இந்திய அரசு தாக்கல் செய்த பட்ஜெட் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் இருப்பதாகவும் கிறிஸ்டாலினா ஜார்ஜிவா தெரிவித்துள்ளார். வளர்ச்சிக்கான தேவைகளுக்காக நிதி ஒதுக்க வேண்டிய அதேநேரத்தில், முதலீட்டு திட்டங்களுக்காகவும் உரிய நிதியை ஒதுக்கி வளர்ச்சியை சமநிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு தனது பட்ஜெட்டில் மேற்கொண்டதாகவும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார். இதன்மூலம், நிலையான வளர்ச்சியை இந்தியா பெருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும் கிறிஸ்டாலினா ஜார்ஜிவா தெரிவித்துள்ளார்.

# மதுரை மல்லிகைப்பூ சீசன் தொடங்கியது ஒரே நாளில் 20 டன் பூக்கள் வரத்தால் விலை சரிவு

மதுரை , ஏப். 29-

மதுரை மாவட்டத்தில் மல்லிகைப்பூ சீசன் தொடங்கியிருப்பதால் பூ மார்க்கெட்டுகளுக்கு அதன் வரத்து அதிகரித்துள்ளது. அதனால், மல்லிகைப்பூ வியாழக்கிழமை ரூ.300 முதல் ரூ.400 வரை விலை சரிவு ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் மல்லிகைப் பூக்கள் பரவலாக விளைவிக்கப்பட்டாலும் மதுரை மல்லிகைக்கு தனி மனமும், நிறமும் உண்டு. அதனாலே, மற்ற ஊர் மல்லிகைப் பூக்களில் இருந்து மதுரை மல்லிகைப்பூ சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. மதுரையில் விளையும் மல்லிகைப்பூ, வெளிநாடுகளில் உள்ள வாசனை திரவிய தொழிற்சாலைகளுக்கு விமானங்கள் மூலம் ஏற்றுமதியாகிறது. அதுபோல், தமிழகத்தின் பிற மாவட்ட பூ மார்க்கெட்டுகளுக்கும் மதுரை மல்லிகைப்பூ விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இப்படி, ஆண்டு முழுவதுமே உள்ளூர் சந்தை முதல் உலக சந்தைகள் வரை மதுரை மல்லிகைப் பூக்களுக்கு அதிக வரவேற்பு உண்டு.

உள்ளூர் சந்தைகளில் திருவிழா காலங்களில் மல்லிகை பூ விலை கடுமையாக உயரும். ஒரு கிலோ ரூ.3 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை கூட விலை உயரும். மதுரை மாவட்டத்தில் 2,500 ஹெக்டேர் பரப்பளவில் மல்லிகை சாகுபடி நடக்கிறது. திருப்பரங்குன்றம், திருமங்கலம், கல்லுப்பட்டி, செல்லம்பட்டி மற்றும் உசிலம்பட்டி வட்டாரங்களில் அதிகளவு மல்லிகைச் செடிகளை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். பொதுவாக மல்லிகை உற்பத்தி சீசன், பிப்ரவரி மாதம் தொடங்கி செப்டம்பர் மாதத்தில் முடியும். இந்த சீசனில் மல்லிகைப்பூக்கள் அதிகளவு சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும். தற்போது மல்லிகைப்பூ சீசன் தொடங்கிவிட்டதால் மதுரை மாவட்ட பூ மார்க்கெட்டுகளில் மதுரை மல்லிகைப்பூக்கள் வரத்து அதிகமாக உள்ளது.

மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பூ மார்க்கெட்டை சேர்ந்த பூ வியாபாரி ராமச்சந்திரன் கூறுகையில், "நேற்று மதுரை மல்லிகை ரூ.400 முதல் ரூ.300 விற்பனையாகிறது. பிச்சி ரூ.300, முல்லை ரூ.300, பட்டன் ரோஸ் ரூ.80, சம்பங்கி ரூ.50, செண்டு மல்லி ரூ.50, கனகாம்பரம் ரூ.100 விற்பனையாகிறது. மற்ற பூக்கள் விலையும் குறைவாகவே விற்கிறது. மல்லிகைப்பூ சீசன் என்பதால் தற்போது சந்தைகளுக்கு மல்லிகைப்பூ அதிகளவு வருகிறது. நேற்று ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் 20 டன்னுக்கு மேலாக மதுரை மல்லிகை விற்பனைக்கு வந்ததால் இந்த விலை சரிவு ஏற்பட்டுள்ளது" என்றார்.

# ஐடி ரெய்டு மூலம் திமுகவை அச்சுறுத்த முடியாது: உதயநிதி ஸ்டாலின்

சென்னை, ஏப். 29-

ஜி ஸ்கொயர் கட்டுமான நிறுவனம் முறையாக வருமான வரி செலுத்தாமல் வரி ஏய்ப்பு செய்ததாக புகார் எழுந்தது. குறிப்பாக, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அண்மையில் இந்த நிறுவனம் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்ததுடன், இந்நிறுவனத்துடன் திமுக தலைமை முக்கியப் பிரமுகர்களுக்குத் தொடர்பு இருப்பதாகவும் குற்றம்சாட்டி இருந்தார்.




இந்தசூழலில் சென்னை, கோவை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் ஜி ஸ்கொயர் நிறுவனத்துக்கு சொந்தமான 50 இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுள்ளனர். சென்னையில் நுங்கம்பாக்கம், ஆழ்வார்பேட்டை, சேத்துப்பட்டு உள்ளிட்ட இடங்களில் சோதனை நடைபெற்றது.


ஆழ்வார்பேட்டையில் உள்ள ஜி ஸ்கொயர் அலுவலகத்திலும், சென்னை நீலாங்கரையில் உள்ள அந்நிறுவன இயக்குநர் பாலாவின் வீட்டிலும் அதிகாலை முதல் அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். , சென்னை அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த தி.மு.க எம்.எல்.ஏ மோகன் வீட்டிலும், அவரது மகன் கார்த்திக் வீட்டிலும் வருமான வரித்துறையினர் சோதனை நடத்திவருகின்றனர். அவர்கள் ஜி ஸ்கொயர் நிறுவனத்தில் பங்குதாரராக இருந்தவர்கள்.

தி.மு.கவை குறி வைத்து வருமான வரித்துறை சோதனை நடைபெறுவதாக அரசியல் களத்தில் பேசப்பட்டது. இந்தநிலையில், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் செய்தியாளர்களை சந்தித்த உதயநிதிஸ்டாலின், 'வருமான வரித்துறை சோதனை நடத்துவதன் மூலம் திமுகவை அச்சுறுத்த முடியாது. திமுக மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை தகர்த்தெறிந்துவிட்டு பணியாற்றி வருகிறோம்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# சென்னையில் பாஜக பிரமுகர் வெட்டிக்கொலை மாநிலத் தலைவர் அண்ணாமலை கண்டனம்



சென்னை , ஏப். 29–

சென்னை பூவிருந்தவல்லியில் பாஜக பிரமுகர் பிபிஜி சங்கர் கொடூரமாக வெட்டி கொலை செய்யப்பட்டதற்கு பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கடும் கண்டனத்தை தெரிவிதுள்ளார்.

ஸ்ரீபெரும்புதூர் அடுத்த வளர்புறம் பகுதியைச் சேர்ந்தவர் பிபிஜி சங்கர். பிரபல ரவுடியான இவர் மீது 10-க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளது. வளர்பிறை ஊராட்சி மன்ற தலைவராகவும் பாஜகவில் எஸ்.சி,எஸ்.டி மாநில பொருளாளராக பதவி வகித்து வந்தார். இந்த நிலையில் காரில் சென்னையில் இருந்து சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை வழியாகவீட்டிற்குசென்று கொண்டு இருந்த அவரை வழி மறித்த மர்ம கும்பல் காரின் மீது நாட்டு வெடி குண்டு வீசியுள்ளனர். இதில் நிலை குலைந்த கார் சிறிது தூரத்தில் நின்றது. பின்னர் காரில் இருந்து வெளியேறிய பிபிஜி சங்கர் சாலையில் ஓடியுள்ளார். அப்போது அங்கு பதுங்கியிருந்த மற்றொரு கும்பல் பிபிஜி சங்கரை அரிவாளால் சரமாரியாக வெட்டி கொடூரமாக கொலை செய்து அங்கிருந்து தப்பி ஓடினர். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த காவல்துறையினர் உடலை கைப்பற்றி பிரேர பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மக்கள் அதிகம் கூடும் பகுதியில் சினிமா பாணியில் நடைபெற்ற இந்த கொலையால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.மேலும் பாஜக பிரமுகர் பிபிஜி சங்கர் கொல்லபட்ட வழக்கில் ஒருவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் 9 தனிப்படை அமைத்து கொலைக்கார கும்பலை காவல்துறையினர் தீவிரமாகதேடிவருகின்றனர். இந்த நிலையில், பாஜக பிரமுகர் வெட்டிக்கொலை செய்யப்பட்டதற்கு பாஜக தலைவர் அண்ணாமலைகண்டனம் தெரிவித்துள்ளார்.

அண்ணாமலை வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் "வளர்புரம் ஊராட்சி மன்ற தலைவரும், பாஜக பட்டியல் அணி மாநிலப் பொருளாளருமான பிபிஜி சங்கர் சமூக விரோதிகளால் நாட்டு வெடிகுண்டு வீசி, வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ள செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். கையாலாகாத திமுக ஆட்சியில்,சட்டம்ஒழுங்கு கட்டுப்பாட்டிலேயே இல்லை என்பது தினம் தினம் அரங்கேறும் குற்றச் சம்பவங்களில் இருந்து தெளிவாகிறது. பொதுமக்கள் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய காவல்துறை, ஆளுங்கட்சியின் ஏவல்துறையாக மாற்றப்பட்டு இருக்கிறது. காவல்துறையைக் கையில் வைத்திருக்கும் முதலமைச்சரோ சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றத் திறனில்லாமல், நம்பர் 1 முதல்வர் என்று நாளொரு நாடகம் போட்டு, பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். உடனடியாக, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், இனியும்இதுபோன்றகுற்றச் சம்பவங்கள்தொடர்ந்தால், மாநிலம் முழுவதும் பாஜக போராட்டம் நடத்தும் என்றும் எச்சரிக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

# குஜராத் மக்கள் குறித்து அவதூறு பேச்சு பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் மீது அகமதாபாத் நீதிமன்றத்தில் வழக்கு



அகமதாபாத், ஏப். 29–

குஜராத் மக்களை அவதூறாக பேசியதாக குற்றம் சாட்டி பீகார் துணைமுதலவர்தேஜஸ்வி யாதவ் மீது அகமதாபாத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

கடந்த மாதம் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பீகார் துணைமுதலவர்தேஜஸ்வி யாதவ் கூறுகையில் "மெகுல் சோக்ஸி மீதான ரெட் கார்னர்நோட்டீஸ் வாபஸ்பெறப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் குஜராத்தியர் மட்டுமே மோசடி செய்பவராக உள்ளனர். எல்ஐசி, வங்கிப்பணத்தைமோசடி செய்தால் மத்தியஅரசே நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் பாஜக ஆட்சியில் சிபிஐ கூண்டுக்கிளி போல உள்ளது" என்று குற்றம் சாட்டினார். தேஜஸ்வி யாதவின் இந்த பேச்சு தொடர்பாக குஜராத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் ஹரேஷ் மேத்தா, குஜராத்தின் அகமதாபாத் நீதிமன்றத்தில் தேஜஸ்வி யாதவ் மீது அவதூறு வழக்குதொடர்ந்துள்ளார்.

இந்திய தண்டனை சட்டம்499 மற்றும் 500-வது பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. அவர் தாக்கல் செய்த மனுவில் ஒட்டுமொத்த குஜராத் மக்களையும் மோசடிக்காரரர்கள் என்று தேஜஸ்வி யாதவ் குற்றம் சாட்டியுள்ளார். அவர் தொடர்ச்சியாக குஜராத் மக்களை அவமதித்து வருகிறார். துணை முதல்-மந்திரி பதவியில் இருப்பவர் இவ்வாறு பேசுவது அழகல்ல. அவர் மீது இந்திய தண்டனை சட்டம் 499 மற்றும் 500-வது பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்"என்றுஹரேஷ் மேத்தா தனது மனுவில் தெரிவித்துள்ளார். இந்த வழக்கு மே 1-ம் தேதி விசாரணைக்கு வர உள்ளதாககூறப்படுகிறது. மேலும் வழக்கு தொடர்பாக தேஜஸ்வி யாதவுக்கு சம்மன் அனுப்பப்படலாம்என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.




# திருமயம் அரசு மருத்துவமனைக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவி வழங்கல்





திருமயம்,ஏப்.29–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு மருத்துவமனையில் 12.12.2022அன்று பிரசவத்திற்காக திருமயத்தை அடுத்த வெள்ளிப்பட்டி கிராமத்தை சேர்ந்த பிரியங்கா அப்பாதுரை என்பவருக்கு திருமயம் அரசு மருத்துவமனையில் சுகப்பிரசவம் நடைபெற்று தாயும் குழந்தையும் நலமாக இருக்கும் மகிழ்ச்சியில் அரசு மருத்துவமனைக்கு நோயாளிகளின் நலன் கருதி ரூபாய் 22 ஆயிரம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்புகருவிதலைமை மருத்துவர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தியிடம் பிரியங்கா தம்பதியினர் வழங்கினர், மேலும் பிரியங்கா அப்பாதுரை தம்பதியினர் குடும்பத்திற்கு தலைமை டாக்டர்கிருஷ்ணமூர்த்தி நன்றி தெரிவித்தார்.

# கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் திறப்பு எப்போது என்று அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்ட அறிவிப்பு



சென்னை , ஏப். 29–

இன்று முதல் 1-9ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் 12ம் வகுப்புபொதுத்தேர்வுகள் கடந்த 3-ந்தேதியும், 10ம் வகுப்புபொதுத்தேர்வுகள் கடந்த 30-ந்தேதியும் நிறைவடைந்தது.இதனை தொடர்ந்து 1 முதல் 9ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இறுதித்தேர்வுகள் நேற்றுடன் நிறைவு பெறுகிறது. இந்த நிலையில், இன்று முதல் 1-9ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. கோடை விடுமுறை முடிந்து ஜூன் முதல் வாரத்தில் பள்ளிகள் திறக்கப்படும் என்று கல்வித்துறை ஏற்கெனவே அறிவித்து உள்ளது. இந்த நிலையில், கோடைகால விடுமுறை முடிந்து ஜூன் ஒன்றாம் தேதி 6 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் செய்தியாளர்கள்சந்திப்பில் தெரிவித்துள்ளார். மேலும், 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 5ஆம் தேதி பள்ளிகள் தொடங்கும் என்றும் அமைச்சர் அறிவித்து உள்ளார்.

# சூடானில் வசிக்கும் அமெரிக்கர்கள் 48 மணி நேரத்துக்குள் வெளியேறுங்கள்: வெள்ளை மாளிகை அறிவிப்பு



அமெரிக்க , ஏப். 29–

சூடானில் இருந்து வெளிநாட்டினரை மீட்பதற்கு அந்தந்த நாடுகள் நடவடிக்கை எடுத்து வரும் சூழலில் தனது நாட்டு மக்களுக்கு அமெரிக்க புதிய அறிவுருத்தலை வெளியிட்டுள்ளது.

ஆப்பிரிக்க நாடான சூடானில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக ராணுவம் மற்றும் துணை ராணுவத்துக்கு இடையே உள்நாட்டுப்போர் மூண்டுள்ளது. தலைநகர் கார்தூம் உள்பட நாட்டின் பல பகுதிகளில் கடுமையான சண்டை நடக்கிறது. இந்த தாக்குதலால் ஏற்பட்டுள்ள மோசமான சூழலில் இருந்து வெளிநாட்டினரை மீட்பதற்கு அந்தந்த நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்தியாவும் 'ஆபரேஷன் காவேரி' என்ற பெயரில் மீட்பு நடவடிக்கைகளை தொடங்கி உள்ளது. இந்த நிலையில், சூடானில் வசிக்கும் அமெரிக்கர்கள் 48 மணி நேரத்துக்குள் வெளியேறுங்கள் என அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மேலும், சூடானில்தற்போதையநிலை மோசமாக இருப்பதாகவும், இரு தரப்பினரும் போர் நிறுத்தத்தை நீட்டிக்கவேண்டும் என்றும் வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# புதுச்சேரி அமுதசுரபி ஊழியர்கள் 7 பேர் பூச்சிக்கொல்லி மருந்து குடித்து தற்கொலை முயற்சி



புதுச்சேரி , ஏப். 29–

புதுச்சேரி அமுதசுரபி ஊழியர்க்ளுக்கு சம்பளம் வழங்கப்படாத்தால்7பேர் பூச்சிக்கொல்லி மருந்து குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி அரசு சார்பு நிறுவனமான அமுதசுரபி கூட்டுறவு நிறுவனத்தின் சார்பில் மளிகை பொருட்கள் விற்பனை நிலையம், பெட்ரோல் பங்க், மதுபானக்கடைகள் உள்ளிட்டவை செயல்பட்டு வருகின்றன. இங்கு 200-க்கும்மேற்பட்ட ஊழியர்கள் பணி செய்து வருகின்றனர். இவர்களுக்கு கடந்த 30 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் தங்களுக்கு நிலுவை சம்பளம் வழங்க வேண்டும், அமுதசுரபிக்கு அரசு நிறுவனங்கள் கொடுக்க வேண்டிய பாக்கியை உடனடியாக வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஊழியர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

புதுச்சேரி அமுதசுரபி ஊழியர்கள் 7 பேர் பூச்சிக்கொல்லி மருந்து குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். அருகில் இருந்த சக ஊழியர்கள் அவர்களை மீட்டு மருத்துவனைக்கு அனுப்பிவைத்தனர்.அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்துபோலீசார் விசாரித்து வருகின்றனர். அமுதசுரபி ஊழியர்கள் பூச்சிக்கொல்லி மருந்து குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட சம்பவம அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நிலுவையில் உள்ள சம்பளத்தை உடனே வழங்க வேண்டும் என்று அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

# கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு அமைவதை யாராலும் தடுக்க முடியாது ராகுல் காந்தி



கலபுர்கி(கர்நாடகா), ஏப். 29–

கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சி அமைவதை யாராலும் தடுக்க முடியாது என்று அக்கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, கலபுர்கியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்ராகுல் காந்தி உரையாற்றினார். அதன் விவரம்: "கர்நாடக அரசில் 50 ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளன. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் அந்தப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும். மேலும், கர்நாடகத்தில் சிறப்புக் கல்விக் கொள்கை கொண்டுவரப்படும். அதன்மூலம், ஐஐடி-க்கள், ஐஐஎம்-கள் ஆகியவை இங்கு கொண்டுவரப்படும்.

கர்நாடகாவில் ஒவ்வொருகிராமத்திற்கும் ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன் மூலம் அந்த கிராமம் வளர்ச்சி காண நடவடிக்கை எடுக்கப்படும். காங்கிரஸ் ஆட்சிக்குவந்ததும்,அரசுப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். பாஜகவால் இதனை செய்ய முடியாது. ஏனெனில், பாஜக அரசு 40 சதவீத கமிஷன் அரசு. காங்கிரஸ் அரசு அமைந்ததும், கர்நாடக மக்களின் நலன்களுக்காக பல்வேறு திட்டங்களை நாங்கள் நடைமுறைப் படுத்துவோம்.

கர்நாடகாவில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி. இதனை யாராலும் தடுக்க முடியாது. பாஜகவுக்கு விருப்பமான எண் 40. எனவே, அந்த கட்சிக்கு இந்த தேர்தலில் 40 தொகுதிகளில்தான் வெற்றி கிட்டும். இது முடிவாகிவிட்டது. கர்நாடக மக்கள் 40 தொகுதிகளை மட்டும்தான் பாஜகவுக்குக் கொடுப்பார்கள். காங்கிரஸ் கட்சி குறைந்தது 150 தொகுதிகளில் வெற்றி பெறும்." இவ்வாறு அவர் உரை நிகழ்த்தினார்.

# அமைச்சர்கள் நிகழ்ச்சிகளில் தடையற்ற மின்சாரம் வழங்க அதிகாரிகளுக்கு அதிரடி உத்தரவு

சென்னை , ஏப். 29–

அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் அரசு நிகழ்ச்சிகளில் தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும் என்று மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் அரசு நிகழ்ச்சிகளில் தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும் என்று அனைத்து தலைமை பொறியாளர்களுக்கும் மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது. நிகழ்ச்சி முடியும் வரை உதவி பொறியாளர் நிலைக்கு குறையாத அதிகாரி மின்விநியோகத்தை கண்காணிக்க மின்வாரியம் ஆணையிட்டுள்ளது. அவசரகாலத்தை தவிர அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் நிகழ்ச்சி நடக்கும் நாளன்று பராமரிப்பு தடைக்கூடாது என்றும் துணைமின் நிலையங்களில் போதிய பணியாளர்கள் இருப்பதை செயற்பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும் அவசர கால மின் தடையை சரிசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதையும் உறுதிசெய்ய வேண்டும் என்றும் இதில் சென்னைக்கு முக்கியத்துவம் அளிக்கவும் மின்சார வாரியம் அறிவுறுத்தி உள்ளது.

# வாட்டர் கேன் மற்றும் பழங்கள் விற்பனை கண்காணிக்க சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் அதிரடி உத்தரவு



சென்னை , ஏப். 29–

சென்னையில் கேன் வாட்டர் தரமான முறையில் தயாரிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை தேனாம்பேட்டையில் சுகாதாரத்துறை துணை இயக்குனர்கள் மற்றும் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தனர். இந்த கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். குறிப்பாக கோடைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், சென்னையில் கேன் வாட்டர் தரமான முறையில் தயாரிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கவேண்டும் என்றும், பழங்கள் செயற்கை முறையில் பழுக்கவைப்பதை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் வியாபாரிகளை தொடர்ந்து கண்காணிக்கவேண்டும் எனவும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அதேபோல, குளிர்பானங்கள் பாதுகாப்பான முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறதா என்பதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும், குட்கா, பான் மசாலா போன்ற தடை செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையை கண்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அதிரடி ரெய்டுகளை நடத்தவேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

# கடையநல்லூரில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடையநல்லூர் நகரத்தில் பூத் கமிட்டி மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



தென்காசி, ஏப்.29–

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடையநல்லூர் நகரத்தில் பூத் கமிட்டி மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தேவர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைமைக் கழகம் ஆணைக்கிணங்க புதிய உறுப்பினர் சேர்க்கை சம்பந்தமாக கடையநல்லூர் நகர செயலாளர் எஸ். அப்பாஸ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் தேர்தல் பொறுப்பாளராக ஆவின் ஆறுமுகம், ஹக்கீம், இஞ்சி இஸ்மாயில், முன்னாள் மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரை, மூப்பன் ஹப்பூர் ரஹ்மான், துணைச் செயலாளர் காசி, நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வார்டு பிரதிநிதிகள், முருகன், சிட்டிதிவான் மைதீன், தனலட்சுமி, மாரி, காளிமுத்து, அக்பர், அப்துல் ரசாக், செய்யது மசூது, கண்ணன், கணேசன், முருகையா, மக்தூம், கல்யாணி, விஜயன், சுப்பையா லதா, ரவி, வீரபுத்திரன், சஹிதா, சிவனம்மாள், செண்பகவல்லி, பத்மாவதி, மகளிர் அணி அமைப்புச் செயலாளர் தனலட்சுமி, சாகுல் ஹமீது, கே.ஆர் யாசின், சுப்பாராம், சக்திவேல், பெருமாள் துரை, உவைஸ் அப்துல் மஜீத், அப்துல் வஹாப், மாரி, ஹபி புல்லா, வீ.டி. எம்.அலி எம். கருப்பசாமி, அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர், விரைந்து புதிய உறுப்பினர் சேர்க்கும் வார்டு செயலாளர்களுக்கு 2 கிராம் தங்க மோதிரம் பரிசாக வழங்கப்படும் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# ரூ.8.06 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணியை மாவட்ட ஆட்சியர், பூம்புகார் எம்எல்ஏ துவங்கி வைத்தனர்





மயிலாடுதுறை, ஏப். 29 -

மயிலாடுதுறை மாவட்டத்தில் நீர்வளத்துறை தூர்வாரும் திட்டப்பணிகள் 2023-24 ன் கீழ் காவிரி ஆறு, மகிமலையாறு, மஞ்சளாறு, வீரசோழனாறு, மண்ணியாறு, அய்யாவையனாறு, விக்ரமனாறு, மற்றும் தெற்குராஜன் ஆறுகளில் பிரியும் வாய்க்கால்கள் மற்றும் வடிகால்கள் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டது.

தரங்கம்பாடி தாலுகா, மேமாத்தூர் கிராமத்தில் வாழ்க்கை வாய்க்கால் தூர்வாரும் பணியை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதன் மூலம் மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.8.06 கோடி மதிப்பீட்டில் 749.74 கி.மீட்டர் தூரம் 51 தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது, பணிகளை விரைந்து முடிக்க ஒப்பந்ததாரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தூர்வாரும் பணி முறையாக நடைபெற விவசாயிகள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்தகுழுவில்5முன்னோடி விவசாயிகள் மற்றும் உதவி செயற்பொறியாளர், வேளாண் அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் கொண்ட குழுக்கள் 51 பணிகளுக்கும் தனித்தனியே அமைக்கப்பட்டு பணியை மேற்பார்வை செய்ய உள்ளதாகவும், மேலும் தமிழக அரசு இந்தாண்டு தூர்வாரும் பணியை கண்காணிக்க புதிய ஆப் அறிமுகப்படுத்தி தினந்தோறும் நடைபெறும் பணிகளை பதிவு செய்வதன் முலம் அரசு இந்த பணிகளை நேரடியாக கண்காணிக்க முடியும். இதனால் விரைவாக பணிகள் முடிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேலும் தூர்வாரும் பணியில் குறைகள் இருந்தால் புகார் அளித்தால் உடனடியாக நடவடிக்கைஎடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், நீர்வளத்துறை செயற்பொறியாளர் வே.சண்முகம், செம்பனார்கோயில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றிய குழு துணை தலைவர் பாஸ்கர், வேளாண்மை துறை இணை இயக்குனர் ஜே.சேகர், உதவி செயற்பொறியாளர்கள் பாண்டியன் ஜெயராமன், உதவி பொறியாளர்கள் விஜயபாஸ்கர், வீரப்பன், தரங்கம்பாடி வட்டாட்சியர் காந்திமதி, செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயலட்சுமி, மீனா, திமுக ஒன்றிய செயலாளர்கள் அமுர்த விஜயகுமார், பி.எம். அன்பழகன், எம்.அப்துல் மாலிக், ஊராட்சி மன்ற தலைவர்கள் தட்சிணாமூர்த்தி, குமார், கே.பி.ராஜா மற்றும் உழவர் குழுவினர், விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான வூசு & குங்ஃபூ சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம் சண்டிகர் நகரில் சண்டிகர் யூனிவர்சிட்டியில் பிப்ரவரி 7-ம் தேதி முதல் 11 -ம் தேதி வரை நடைபெற்றது. இதில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி வடபழனி கேம்பஸில் பயிலும் மாணவன் வி.தருண்ராஜ் தாவோலு பிரிவில் கலந்துகொண்டு இரண்டு தங்கப்பதக்கம் வென்று கல்லூரிக்கும் மற்றும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளர். இவரின் சாதனையை தெலுங்கானா மற்றும் பாண்டிச்சேரி கவர்னர் தமிழிசை சௌந்தரராஜன் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தார். சென்னை மாவட்ட வூசு தலைவர் புல்கானி, நேதாஜி சமூக சேவை இயக்கத்தின் செயலாளர் எஸ்.வன்னிய ராஜன், சென்னை மாவட்ட வூசு செயலாளர் மாஸ்டர் பி.விசாகபதி மாணவன் தருண் ராஜிக்கு பயிற்சி அளித்து ஊக்கப்படுத்தினார்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்படையார் கோயில் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திருக்கடையூர், மாணிக்கம் பங்கு, ஆறுபாதி, ஆக்கூர் ஆகிய ஊராட்சிகளுக்கு 15 வது மானிய குழு திட்டத்தின் கீழ் ரூ. 8 லட்சம் மதிப்புள்ள டிராக்டர் மற்றும் டிப்பர்களை ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன், ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், செம்பனார்கோயில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றிய குழு துணை தலைவர் பாஸ்கர், வேளாண்மை துறை இணை இயக்குனர் ஜே.சேகர், செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயலட்சுமி, மீனா, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்

# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் கலாச்சார திருவிழா சம்ருதி 2023 நடைபெற்றது



புதுக்கோட்டை, ஏப்.29-

திருச்சி - புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சுதர்சன் பொறியியல் கல்லூரியில், கல்லூரி கலாச்சார திருவிழா சம்ருதி 2023 நடைபெற்றது, இதில் விஜய் டிவி சூப்பர் சிங்கர் டைட்டில் வின்னர் திரைப்பட பின்னணி பாடகர் மற்றும் பாடகி நாட்டுப்புற இணையர் செந்தில் கணேஷ் மற்றும் ராஜலக்ஷ்மி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தங்களது அபாரமான பாட்டு திறமையால் அரங்கை அதிர வைத்தனர்.

மாணவர்களும் உற்சாகத்தோடு அவர்கள் பாடலுக்கு நடனம் ஆடினர், பின்னர் குத்துவிளக்கு ஏற்றி கடவுள் வாழ்த்து பாடலுடன் கலாச்சார விழா துவங்கப்பட்டது, இவ்விழாவில் கல்லூரி முதல்வர் ஸ்ரீனிவாசன் துவக்க உரையாற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார், இதில் கல்லூரியின் துணை முதல்வர் சுஜாதா, கல்லூரியின் சிறப்பு கற்றல் அதிகாரி சசிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், அதன் பின்னர் கல்லூரியில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மாணவ மாணவிகள் இசை நிகழ்ச்சி, நடன போட்டி, தமிழர் கலையான சிலம்பாட்டம் என பங்கேற்று அரங்கம் உற்சாகத்துடன் காணப்பட்டது, இறுதியில் கல்லூரியின் நுண்கலை மாணவர் சங்கத் தலைவர் மற்றும் கலாச்சார நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் மதுமதி நன்றியுரை ஆற்றி விழாவை முடித்து வைத்தார், விழா இனிதே நிறைவடைந்தது.

# சீர்காழி சட்டை நாதர் கோயில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு கலசம் வைக்கும் பணி தொடங்கியது



சீர்காழி, ஏப். 29 -

தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான சீர்காழி சட்டைநாதர் கோவில் குடமுழுக்கு விழா மே 24-ஆம் தேதி நடைபெற உள்ளது

இதனை முன்னிட்டு தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் ருணம் தீர்த்த விநாயகர் கோபுரத்தில் செப்புக்கலசம் வைத்து ராஜகோபுரங்கள், பரிவார விமானங்கள், கோபுர விமானங்கள் அனைத்திலும் மொத்தமாக 85 கலசங்கள் வைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் திருப்பணி உபயதாரர் பொறியாளர் மார்கோனி, செயலாளர் கோபி நடராஜன், கோவில் சூப்பிரண்டுதியாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நடுக்கரை ஊராட்சியில் புதிய மின்மாற்றி துவக்க விழா எம்எல்ஏ நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார்



தரங்கம்பாடி, ஏப். 28 -

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, செம்பனார்கோயில் அருகே நடுக்கரை ஊராட்சியில் புதிய மின்மாற்றி துவக்க விழா நடைபெற்றது.

நடுக்கரை ஊராட்சி மேலப்பாதி கிராமத்தில் குறைந்தமின் அழுத்தத்தால் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையில் புதிய மின் மாற்றி அமைக்கவேண்டும் என்று அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் 100 கிலோ வாட் திறன் கொண்ட ரூ.7 லட்சம் செலவில் புதிய மின்மாற்றி அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராகபூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு மின்மாற்றி இயந்திரத்தை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சிக்கு சீர்காழி மின் வாரிய செயற்பொறியாளர் லதா மகேஸ்வரி தலைமை வகித்தார். உதவி செயற்பொறியாளர் அப்துல் வஹாப் மரைக்காயர், உதவி மின் பொறியாளர் வனிதா ஆகியோர் முன்னிலை வகித்தார்.

தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மாவட்ட துணை செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய செயலாளர் பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக், செம்பொன் ஒன்றிய துணை தலைவர் மைனர் பாஸ்கர் மற்றும் திமுக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# காரைக்கால் தனியார் துறைமுகத்தை அதானி நிறுவனத்திற்கு வழங்கியதை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




காரைக்கால், ஏப். 29 -

காரைக்கால் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காகவும், காரைக்கால் மக்களின் வேலை வாய்ப்பிற்காகவும் காரைக்காலில் தனியார் துறைமுகம் கடந்த 2009 ஆம் ஆண்டு துவங்கி செயல்பாட்டில் இருந்து வருகிறது.

இந்தத் துறைமுகத்தை அதானி நிறுவனத்திற்கு வழங்கியதை கண்டித்தும், காரைக்கால் பகுதியில் வளத்தை சுரண்டி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி, லாபம் ஈட்டுவதற்கு அதானி குழுமத்திற்கு அனுமதி அளிப்பதை எதிர்த்தும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் துறைமுக முகப்பில் நடைபெற்றது.

மாநில செயலாளர் சலீம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் விஸ்வநாதன், மாவட்ட செயலாளர் மதியழகன் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராகவும், துறைமுகத்தை அதானிக்கு வழங்கியதை கண்டித்தும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். போராட்டத்தின் போது செய்தியாளரிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சலீம், காரைக்காலில் செயல்பட்டு வரக்கூடிய துறைமுகம் ஏற்கனவே மார்க் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும், தற்போது முறைகேடான முறையில் அதானி நிறுவனத்திற்கு தாரை வாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனை கண்டித்தும் புதுச்சேரி ஆளும் என்.ஆர்.காங்கிரஸ் பிஜேபி அரசை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதாகவும், இந்த துறைமுகம் மூலம் அதானி நிறுவனம் பல கோடி ரூபாயை சம்பாதிக்க போவதாகவும், இறக்குமதி செய்யப்படும் பொருட்களை, நாகூர் ரயில் பாதை, தற்போது புதிதாக அமைய உள்ள பேரளம் ரயில் பாதை, நவம்பர் மாதம் நிறைவு பெற உள்ள விழுப்புரம் நாகப்பட்டினம் நான்கு வழிச்சாலை, காரைக்காலில் இருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்து, நாகப்பட்டினத்தில் அமைய உள்ள பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையம் இதை எல்லாம் கருத்தில் கொண்டே அதானி நிறுவனம் முறைகேடான முறையில் மார்க் நிறுவனத்திடமிருந்து இந்த துறைமுகத்தை கைப்பற்றி இருப்பதாகவும் இதற்கு முழுமையாக மத்திய அரசு துணை போவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்த துறைமுகத்தில் காரைக்கால் மற்றும் புதுச்சேரி பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் வேலை வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். போராட்டத்திற்கு பின்னர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து அனைத்து கோரிக்கைகளையும் முன்வைத்து மனு அளிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தென்காசியில் புளியங்குடி நகர காய்கனி வாகன ஓட்டுநர் நலச்சங்கம் சார்பில் கருப்பு பேஜ் அணிந்து அறவழிப் போராட்டம்



தென்காசி,ஏப்.29-

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகர எலுமிச்சங்காய், காய்கனி வாகன ஓட்டுநர் நலச்சங்கம் சார்பில் புளியங்குடி சாலை விநாயகர் கோவில் எதிர்புறம் கருப்பு பேஜ் அணிந்து அறவழிப் போராட்டம் நடைபெற்றது. புளியங்குடி வாகன ஓட்டுநர் சங்கத் தலைவர் சபரி சுதன், செயலாளர் பாலமுருகன், பொருளாளர் ஆர். பாலசுப்பிரமணியம், துணைத் தலைவர் அலெக்ஸ் பாண்டியன், துணைச் செயலாளர் போத்திராஜ், துணை பொருளாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் தமிழ்நாடு அனைத்து வாகன ஓட்டுநர் சங்க பாதுகாப்பு பேரமைப்பு சார்பில் வாகனங்களில் கருப்புக் கொடி ஏற்றி, ஓட்டுநர்களிடம் கருப்பு பேட்ஜ் அணிந்து, அறவழிப் போராட்டம் நடைபெற்றது.

வாகன ஓட்டுநரின் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்திய குவாலியர் ஆர்.டி.ஓ.வை பணி நீக்கம் செய்ய வேண்டியும், லஞ்சத்தின் உச்சமாய் இருக்கும் அத்திப்பள்ளி சோதனை சாவடியை அகற்றுமாறும், இனி இந்தியாவில் எந்த ஓட்டுநரும் அரசு அதிகாரிகளாலும் சமூக விரோதிகளாலும் தாக்கப்படக்கூடாது, லஞ்சத்தை தடை செய் இல்லையேல் லஞ்சத்தை சட்டமாக்குங்கள், தவிர்த்திடு நிறுத்திடு வாகனத்தை வழிமறித்து வாங்கும் லஞ்சத்தை நிறுத்திடு, தவணைத் தொகை பெண்டிங் என்பதற்காக லோடோடு வாகனத்தை பறிமுதல் செய்யாதே, இரவு பகல் பாராமல் கண் விழித்து வாகனம் ஓட்டும் எங்களுக்கு பணி பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்து என 25 கோரிக்கைகளை முன்வைத்து வாகன ஓட்டுநர்கருப்பு பேட்ச் அணிந்து அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## ரூ.15 லட்சம் மதிப்பிலான மின்வயர் திருட்டு

# திமுக ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் உள்பட 6 பேர் சிறையில் அடைப்பு



ஊத்துக்கோட்டை, ஏப். 29 -

திருவள்ளூர் மாவட்டம், வெங்கல் அருகே கீழானூர் துணை மின் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிலும், ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் உள்ளிட்ட பல்வேறு துணை நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மின்சார வயர்கள் திருடு போனது. மேலும், மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உயர் அழுத்த மின் வயர்கள் திருடு போனதாக கூறப்படுகிறது. இவற்றின் மதிப்பு பல லட்சம் இருக்கும்.

நேற்று முன்தினம் வெங்கல் காவல் நிலைய போலீசார் ரோந்து பணி மேற்கொண்டனர். அப்பொழுது மின் வயர் திருட்டு சம்பவம் தொடர்பாக திருவள்ளூர் அருகே உள்ள ஒதிக்காடு பகுதியைச் சேர்ந்த திருவள்ளூர் வடக்கு ஒன்றியதிமுகஇளைஞரணி அமைப்பாளர் அலெக்ஸ் என்ற அலெக்சாண்டர் (வயது 35)என்பவருக்கு தொடர்பு இருப்பதை போலீசார் கண்டுபிடித்தனர்.

எனவே, அவரை போலீசார் பிடித்து வந்து வெங்கல்காவல்நிலையத்தில் துருவி துருவி விசாரணை மேற்கொண்டனர். இதில் அலெக்ஸ் தனது நண்பர்களான ஒதிக்காடு கிராமத்தைச் சேர்ந்த சூர்யா (வயது25), எழிலரசன் என்ற சுனில் (வயது21), பிரவீன் குமார் (வயது33), சித்தம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சகோதரர்கள் பரத்குமார் (வயது20), முகேஷ்குமார் (வயது24) என மொத்தம் ஆறு பேர் மின் வயர்களை திருடியதை ஒப்புக்கொண்டார்.

அவர்கள் கொடுத்த தகவலின்படி ரூ.15 லட்சம் மதிப்பிலான மூனேகால் டன் அலுமினிய மின்சார வயர்களை போலீசார் பறிமுதல் செய்தனர். குற்றவாளிகள் ஆறு பேர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து திருவள்ளூர் முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். பின்னர் அவரது உத்தரவின் பேரில் குற்றவாளிகள் ஆறு பேரையும் நேற்று விடியற்காலை புழல் மத்திய சிறையில் போலீசார் அடைத்தனர்.

மின் வயர் திருட்டில் ஒன்றியதிமுகஇளைஞரணி அமைப்பாளர் ஒருவரும், சித்தம்பாக்கத்தைச்சேர்ந்த சகோதரர்கள் இருவரும் ஈடுபட்ட சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## சமூக ஆர்வலர் விமல்ராஜ் பிறந்தநாளையொட்டி

# ரூ.1.5 லட்சம் மதிப்பிலான பேரிகார்டுகள் போக்குவரத்து காவல் துறைக்கு வழங்கப்பட்டது






காரைக்கால், ஏப். 29 -

காரைக்காலில் சமூக ஆர்வலர் விமல் நற்பணி மன்றம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பொது மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக நேற்று விமல்ராஜின் பிறந்தநாளையொட்டி விமல் நற்பணி மன்றம் சார்பில் ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பிலான பத்து பேரிக்காடுகள் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் காரைக்கால் போக்குவரத்து காவல்துறைக்கு வழங்கினர்.

முன்னதாக 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தனியார் அரங்கில் ரத்ததானம் வழங்கினர். ரத்த தானம் வழங்கிய இளைஞர்களுக்கு பால், முட்டை உள்ளிட்ட சத்தான உணவுகள் வழங்கப்பட்டது. ரத்த தான நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுப்ரமணியன், சமூக ஆர்வலர் விமல்ராஜ், பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் விக்டர் ராயப்பசாமி உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.


பிறந்தநாள் என்று அறிவாளை வைத்து கேக் வெட்டி இன்ஸ்டாகிராமில் போஸ்ட் போடும் இளைஞர்களுக்கு மத்தியில் தனது பிறந்த நாளை மக்களுக்கு பயனுள்ளதாக கொண்டாடும் விமல் ராஜ்க்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# கர்நாடக தேர்தலுக்குப் பின் ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை மீண்டும் தொடங்கும் கரூர் எம்.பி. ஜோதிமணி தகவல்

புதுக்கோட்டை, ஏப். 29 -

அ.தி.மு.க தனித்து செயல்பட முடியாதவாறு பா.ஜ.க.வின் ஆளுமைக்குள் சிக்கியுள்ளது என ஜோதிமணி எம்.பி. தெரிவித்தார்.

காங்கிரஸ் முத்த தலைவர் ராகுல்காந்தி கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ம் தேதி தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாரத் ஜோடோ யாத்திரை என்ற பெயரில் இந்திய ஒற்றுமை யாத்திரையை தொடங்கினார். இந்த பாதயாத்திரை தமிழ்நாடு,



கேரளா, கர்நாடகா, அரியானா, மராட்டியம், டெல்லி, உத்தரபிரதேசம், பஞ்சாப் பல்வேறுமாநிலங்களை கடந்து காஷ்மீரில் நிறைவடைந்தது. இந்த நிலையில் கர்நாடக சட்டமன்ற தேர்தல் முடிந்த பின் ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை மீண்டும் தொடங்கும் என்று புதுக்கோட்டையில் கரூர் எம்.பி ஜோதிமணி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழகத்தில் அ.தி.மு.க. தனித்து செயல்பட முடியாதவாறு பா.ஜ.க.வின் ஆளுமைக்குள் சிக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கர்நாடக சட்டமன்றத்திற்கு வரும் மே 10-ந்தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அங்கு தற்போது தீவிர தேர்தல் பிரச்சாரங்கள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# குற்றாலத்தில் காமராஜர் சிலை அமைக்க கோரி, தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் கோரிக்கை மனு

தென்காசி, ஏப்.29-

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலரிடமும், குற்றாலம் பேரூராட்சி மன்றத் தலைவரிடமும் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் மனு அளித்தனர், அந்த மனுவில் நாடுசுதந்திரம் வாங்கிய பின்பும் 1956 வது ஆண்டுக்கு முன்பு வரை குற்றாலம் பகுதியானது திருவிதாங்கூர் சமஸ்தான நிர்வாகம் கேரள மாநில நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தது, அப்போது இந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் மீது திருவிதாங்கூர் சமஸ்தானம் பல்வேறு அடக்கு முறைகளை கொண்டு வந்தது. இந்த அடக்கு முறைகளை எதிர்த்து மார்சல் நேசமணி, நாடார் கஞ்சன், நாடார் சிதம்பரம் பிள்ளை



ஆகியோர் தலைமையில் இந்த பகுதியில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று இருக்கிறது.

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி காலத்தில் மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது குற்றாலம் பகுதி தமிழகத்தோடு இணைக்கப்பட்டது, குற்றாலம் பகுதியை தமிழகத்தோடு இணைத்த பெருமை பெருந்தலைவர் காமராஜரை சேரும். காமராஜரின் சீரிய முயற்சியினால் குற்றாலம் பகுதியை தமிழகத்தோடு இணைத்தனர், இதை நினைவு கூறுகின்ற வகையில் குற்றாலம் பகுதியில் உள்ள பூங்காவிற்கும் குற்றாலம் ஐந்தருவி சாலைக்கும் பெருந்தலைவர் காமராஜரின் பெயரை சூட்ட வேண்டும் என்றும் குற்றாலத்தில் பெருந்தலைவர் காமராஜருக்கு திருவுருவச் சிலை நிறுவ வேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது, இதில் மாநில துணை பொதுச் செயலாளர் ஜான் டேவிட், பொருளாளர் சுப்பிரமணியன், ராம்குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வெறுப்பு பேச்சு குறித்து புகார் இல்லாவிட்டாலும் வழக்கு பதியுங்கள் மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஏப். 29 -

வெறுப்பு பேச்சு கடுமையான குற்றம் என தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், அவ்வாறு பேசியது தொடர்பாக புகார் இல்லாவிட்டாலும் வழக்கு பதிய வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

வெறுப்புபேச்சு தொடர்பாக பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகளை, நீதிபதிகள் கே.எம். ஜோசப், பி.வி. நாகரத்னா அமர்வு நேற்று விசாரித்தது. அப்போது, "வெறுப்பு பேச்சு ஒரு கடுமையான குற்றம். இது தொடர்பாக புகார் இல்லாவிட்டாலும் மாநில அரசுகள் வழக்குகளை பதிவு செய்யவேண்டும். வழக்குகளை பதிவு செய்வதில் தாமதம் செய்வது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படும்.

வெறுப்பு பேச்சு பேசுபவரின் மதத்தைக் கருத்தில் கொள்ளாமல், அவருக்கு எதிராக வழக்கு பதிய வேண்டும். அரசியல் சாசனத்தின் முகப்பு உரையில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டியதுமிகவும் அவசியம். வெறுப்பு பேச்சு நாட்டின் மதச்சார்பற்ற கட்டமைப்பை பாதிக்கும். குறிப்பாக சிறுபான்மையினரிடையே, இது கவலையையும், அச்சத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. இதைத் தடுக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கண்காணிப்பு அதிகாரியை மாநில அரசுகள் நியமிக்க வேண்டும்" என தெரிவித்தனர். மேலும், இந்த வழக்கின் அடுத்த விசாரணை மே 12 ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# மெட்ரிக் பள்ளியை தருமபுரம் ஆதீனத்திடம் ஒப்படைத்து மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் சிபிஎஸ்சி பள்ளியாக தரம் உயர்த்த முயற்சி

சீர்காழி, ஏப். 29 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் எழில் மலர் மெட்ரிக் பள்ளி சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. இப்பள்ளி கல்விக்குழுவினர் பள்ளியை தொடர்ந்து நடத்திடும் வகையில், தருமபுரம் ஆதீனம் 27 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் நிர்வாக ரீதியாக முழுமையாக ஒப்படைத்து ஆவணங்களை வழங்கினர்.



இதனையடுத்து இப்பள்ளி குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிக் மேல்நிலைபள்ளியாக செயல்படவுள்ளது. வரும் கல்வியாண்டுமுதல்சிபிஎஸ்சி பாடத்திட்ட வகுப்புகளும் தொடங்கப்பட்டு குறைந்த கட்டணத்தில் ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி அளிக்க உள்ளதாக தருமபுரம் ஆதீனம் அப்போது தெரிவித்தார்.

இதில் கல்வி குழுவை சேர்ந்த செல்வம், பாலவேலாயுதம், அன்பழகன், முழுமதி இமயவரம்பன், சீனிவாசன், மார்கோனி ஆகியோர் உடனிருந்தனர்.

# சோனியா காந்தியை விஷம் நிறைந்த பெண் என விமர்சித்த பாஜக எம்.எல்.ஏ

டெல்லி, ஏப். 29 -

சோனியா காந்தியை விஷம் நிறைந்த பெண் என பாஜக எம்.எல்.ஏ. விமர்சித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

கர்நாடக மாநிலம் பிஜபூர் தொகுதி பாஜக எம்.எல்.ஏ. பசனகுடா படேல். இவர் தேர்தல் யத்நல் பகுதியில் நேற்று பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது, அவர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தியை கடுமையாக விமர்சித்தார்.

இது தொடர்பாக பாஜக எம்.எல்.ஏ. பசனகுடா கூறுகையில், ஒட்டுமொத்த உலகமும் பிரதமர் மோடியை ஏற்றுக்கொண்டுவிட்டது. ஒருகாலத்தில் பிரதமர் மோடிக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்தது. பின்னர், சிவப்பு கம்பளம் விரித்துபிரதமர்மோடியை வரவேற்கின்றனர்.



இப்போது காங்கிரசால் பிரதமர் மோடியை கோப்ரா பாம்புடன் ஒப்பிடுகின்றனர். பிரதமர்மோடி விஷத்தை கக்குகிறார் என்று கூறுகின்றனர்.

சோனியா காந்தி விஷம்நிறைந்தபெண்ணா சீனா, பாகிஸ்தானுக்கு ஏஜெண்டாக இருந்து சோனியா காந்தி அவர்களுக்காக வேலை செய்கிறார் என்றார். சோனியா காந்தியை விஷம் நிறைந்த பெண் என விமர்சித்த பாஜக எம்.எல்.ஏ.வுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. பாஜக எம்.எல்.ஏ.வை கட்சியில் இருந்து நீக்க வேண்டும்என்றுகாங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

## பொன்னியின் செல்வன் - 2 திரைப்படத்தை

# சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிடத் தடை: சென்னை ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஏப். 29 -

பொன்னியின் செல்வன் - 2 திரைப்படத்தை சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிடத் தடை விதித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

மணிரத்னம் இயக்கத்தில் விக்ரம் ஆதித்த கரிகாலனாக, கார்த்தி வந்தியத்தேவனாக, ஜெயம் ரவி அருண்மொழி வர்மனாக, ஐஸ்வர்யா ராய் நந்தினியாக, திரிஷா குந்தவையாக, பிரகாஷ்ராஜ் சுந்தரசோழனாக, சரத்குமார் பெரிய பழுவேட்டரையராக, பார்த்திபன் சின்ன பழுவேட்டைரையராக நடித்த 'பொன்னியின் செல்வன்' முதல் பாகம் கடந்த ஆண்டு வெளியாகி ரூ.500 கோடிக்கு மேல் வசூலை குவித்தது. இதையடுத்து இப்படத்தின் இரண்டாம் பாகம் நேற்று ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் திரையரங்குகளில் காலை 9 மணிக்கு வெளியானது.

இந்நிலையில், பொன்னியின் செல்வன் படத்தின் முதல் காட்சியை இப்படத்தில் நடித்த நட்சத்திரங்களான கார்த்தி, ஜெயம் ரவி, திரிஷா, விக்ரம், ஜெயராம் ஆகியோர் வெவ்வேறு திரையரங்குகளில் பார்த்து ரசித்தனர். இந்நிலையில்,பொன்னியின் செல்வன் 2 திரைப்படத்தை சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிட தடை விதித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. 3,888 மேற்பட்ட இணையதளங்களில் வெளியிடுவதைத் தடுக்க இணைய தள சேவை நிறுவனங்கள் தடுக்கக் கோரி லைகா பட தயாரிப்பு நிறுவனம் தொடர்ந்த வழக்கில் நீதிபதி எஸ். சௌந்தர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே கோவில்பத்து கிராமத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த ஸ்ரீ மகா காளியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் மூன்றாவது வெள்ளி கிழமையில் பால்குடம் விழா நடைபெறுவது வழக்கம். அதனையொட்டி நேற்று நடைபெற்ற விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு பால்குடம், பால் காவடி, பன்னீர் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர். பால் காவடி முக்கிய வீதிகளின் வழியாக சுற்றி வந்து நிலையை அடைந்தது. திரளான பக்தர்கள் வேண்டுதலை நிவர்த்தி செய்ய பால் குடம் ஏந்தி, ஸ்ரீ மகா காளியம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டனர்.

## கறம்பக்குடி தாலுகா, அய்யங்காடு கிராமத்தில்

# நோய் கண்டறியும் மற்றும் காய்ச்சல் விழிப்புணர்வு மருத்துவ முகாம்

புதுக்கோட்டை, ஏப்.29-

முதலமைச்சரின் மருத்துவ காப்பீடுதிட்டத்தின் கீழ் நோய் கண்டறியும் மற்றும் காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாம் தமிழக முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர்.கே.எச். சலீம் வழிகாட்டுதலின்படி டீம் மருத்துவமனை சார்பாக புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, அய்யங்காடு கிராமத்தில் நேற்று நடைபெற்றது.

முகாமிற்கு அய்யங்காடு கிராம பஞ்சாயத்து தலைவர் ரெத்தினம் தலைமை தாங்கினார், வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர், தற்போது நிலவி வரும் நோய்த் தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை பற்றியும் டெங்கு, பன்றிக்காய்ச்சல், இன்ஃபுளுயன்சா போன்ற வைரஸ் காய்ச்சலால் ஏற்படும் சோர்வு, தலைவலி, அதிக உடல் வெப்பம், தொண்டைவலி, உடல்வலி, வாந்தி, வயிறுவலி, எலும்புவலி, மயக்கம் ஆகிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள



மருத்துவமனைகளை அனுகி பரிசோதனை செய்துகொண்டு முறையாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும் என்றும் முகாமில் அறிவுறுத்தப்பட்டது. இக்காலக்கட்டத்தில் குடிநீரை காய்ச்சி பருக வேண்டும், கை, கால்களை சுத்தமாக அடிக்கடி சோப்பு போட்டு கழுவ வேண்டும், சத்துநிறைந்த பழங்கள், காய்கறிகளை உண்ண வேண்டும், அதிக எண்ணெயில் வறுத்து, பொரித்த உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும், மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் முககவசம் அணியவும், சிறிதளவு சமூக இடைவெளியுடன் இருந்தால் நோய்த் தொற்றிலிருந்து நம்மை பாதுகாக்கலாம் என்று மருத்துவர் விளக்கி கூறினார். டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இருக்கை மருத்துவர் சூரிய பிரகாஷ் அனைவருக்கும் பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கினார், முகாமில் இரத்த அழுத்தம், உயரம், எடை, வெப்பத்தின் அளவு, இரத்த சர்க்கரை அளவு போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டது.

இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர், முகாம் ஏற்பாடுகளை டீம் மருத்துவமனையின் பொது மேலாளர் ஜோசப், செவிலியர் கண்காணிப்பாளர் யோகேஸ்வரி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மதுபாலன் ஆகியோர் செய்திருந்தனர், முடிவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் பாண்டியராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# அரியலூர் மாவட்டத்தில் சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டத்தின்கீழ் 13 பணிகள் ரூ.3.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தகவல்

அரியலூர்,ஏப்.29-

அரியலூர் மாவட்டத்தில் சிறப்பு தூர் வாரும் பணிகள் திட்டத்தின் கீழ், 13 பணிகள் ரூபாய் 3.13 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ளதாக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில், நீர்வளத்துறையின் சார்பில் சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டத்தின்கீழ், அரியலூர் ஊராட்சி ஒன்றியம் பெரிய நாகலூர் ஓடை, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம் இடங்கன்னி கிராமத்தில் உள்ள சிந்தாமணி ஓடை உள்ளிட்ட ஓடைகள், மற்றும் வடிகால்கள் தூர்வாரும் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.



அரியலூர் மாவட்டத்தில், மருதையாறு வடிநிலக்கோட்டம், அரியலூர் மற்றும் ஆற்றுபாதுகாப்பு கோட்டம், திருச்சி கட்டுப்பாட்டில் உள்ள வரத்து வாய்க்கால்கள், பாசன வாய்க்கால்கள், உபரி நீர்வாய்க்கால்கள், ஓடை மற்றும் வடிகால்கள் தூர்வார, 13 பணிகளுக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் அரியலூர் மாவட்டத்தில் சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டத்தின்கீழ், அரியலூர் மருதையாறு வடிநிலக்கோட்டத்தில், 13 பணிகள் 42.80 கி.மீ நீளத்திற்கு ரூ.3.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதைத் தொடர்ந்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர், தா.பழூர், ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில், ஊராட்சிப் பகுதிகளில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் நிதியாண்டு மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிமெண்ட் சாலைப் பணிகள், குளம் ஏரி ஆழப்படுத்தி கரைகளை பலப்படுத்துதல் பணிகள், அங்கன்வாடி கட்டடப் பணிகள், கதிரடிக்கும் களம் அமைத்தல், கழிவுநீர் கால்வாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு செய்தார். மேலும், ஊராட்சிப் பகுதிகளில் அரசின் திட்டப்பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை செயற்பொறியாளர் வேல்முருகன், உதவி செயற்பொறியாளர் சாந்தி, உதவி பொறியாளர்கள் தினகரன், தியாகராஜன், மருதமுத்து, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை வட்டார வளமையத்தில் இல்லம் தேடிக் கல்வி மைய தன்னார்வலர்களுக்கு பயிற்சி

கந்தர்வகோட்டை, ஏப்.29-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் வட்டார வளமையத்தில் இல்லம் தேடி கல்வி மைய தன்னார்வலர்களுக்கு ஆயிரம் ஆயிரம் அறிவியல் திருவிழா என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வட்டார வளமைய மேற்பார்வையாளர் பிரகாஷ் தலைமை வகித்தார், இப்பயிற்சியை வானவில் மன்ற மாவட்ட கருத்தாளர் முத்துக்குமார் தொடங்கி வைத்து பேசியதாவது

புதுக்கோட்டை மாவட்டத்தை பொருத்தவரை 400 இடங்களில் இது போன்ற பயிற்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது, இதன் மூலம் மாணவர்கள் எளிய அறிவியல் பரிசோதனைகள், கணித புதிர்கள், மந்திரமா தந்திரமா, அறிவியல் பாடல்கள், காகித மடிப்பு கலை உள்ளிட்ட பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் 5 மணி நேரம் அறிவியல் திருவிழா நடத்தும் வகையில் இப்பயிற்சிகள்



வழங்கப்படுகிறது. மாநிலம் முழுதும் நடத்தப்படும் இந்த திருவிழாக்களின் ஒரு பகுதியாக நம் புதுக்கோட்டை மாவட்டத்திலும் 13 ஒன்றியங்களிலும் நடைபெறவுள்ளது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இதன் மூலம் கோடை காலங்களில் விடுமுறையில் வீட்டில் இருக்கும் மாணவர்களுக்கும் அறிவியல் மனப்பான்மை மற்றும் சிந்திக்கும் திறன், பகுத்தறியும் திறன், கணித திறனை வளர்க்கும் விதமாக இந்த பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இந்த பயிற்சியை ஒவ்வொரு மாணவனுக்கும் செம்மையாக கொண்டு சேர்க்கும் பணியை நாம் சிறப்பாக செய்யவேண்டும் என்று பேசினார்.

இதில் வானவில் மன்ற கருத்தாளர்கள் தெய்வீக செல்வி, வசந்தி ஆகியோர் பயிற்சி வழங்கினர். இதில் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் பாரதிதாசன், சுரேஷ்குமார், ராஜேஸ்வரி, பள்ளி மேலாண்மை குழு கருத்தாளர்கள் அரும்பு, பாப்பா உமாநாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர், நிகழ்ச்சியை இல்லம் தேடிக் கல்வித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா ஒருங்கிணைத்தார்.

# கந்தர்வகோட்டை வித்யா விகாஸ் பள்ளியில் ஆண்டு விழா மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது

கந்தர்வகோட்டை, ஏப். 29 -

கந்தர்வகோட்டை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. தஞ்சைக்கும், புதுகைக்கும் கந்தர்வகோட்டையில் மாபெரும் கல்வி நிறுவனமாய்செயல்பட்டுக் கொண்டிருக்கும் வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் அதன் 12வது ஆண்டுவிழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

முன்னதாகபள்ளியின் செயல் அறங்காவலர் கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றார். காலப் பெட்டகத்து கவினுறையை வாசித்த செயல் அறங்காவலர் பாஸ்கர், 1997-ல் திருச்செங்கோட்டில் துவங்கிய வித்யா விகாஸ் பல்வேறு பரிமாணங்களுடன் கந்தர்வகோட்டையிலும் வியாபித்துள்ளதை எடுத்துரைத்தார். 2011-ல் தொடங்கிய ஆண்டு முதல் மாநில அளவிலான கல்விச் சாதனைகளை பட்டியலிட்ட அவர், விளையாட்டுத்துறையில் தேசிய அளவிலும், ஒலிம்பியாட்டிலும் இப்பள்ளி மாணவர்கள் நிகழ்த்திய சாதனைகளை கரகோஷங்களுக்கிடையே விளக்கினார். வருங்காலங்களில் புதிய மாணவர்களுக்கான சலுகைகளையும் அறிவித்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட காவல் ஆய்வாளர் செந்தில் மாறன் தனது உரையில் ஜாதி, மதம், இனம் கடந்து தமிழ்ச் சமுதாயம்தான் இன்று உயர்ந்து காணப்படுவதாகவும் அதன் வழித் தோன்றல்களாக இன்றைய இளைய சமுதாயம் மாணவர் வடிவில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டி கல்வி, விளையாட்டு ஆகிய இரு துறைகளிலும் சிறந்து விளங்கும் இப்பள்ளியில் பயிலும் மாணவர்களை வாழ்த்துவதாகவும், அமைச்சுப்பணிபோன்ற உயர் பதவிகளுக்குக் கூட போட்டிகள் நிறைந்து காணப்படும் இந்நேரத்தில் மாணவர்கள் அனைவரும் கடுமையாக உழைத்து நன்கு படித்து வாழ்க்கையில் முன்னேறவேலர்டும் என வாழ்த்தினார்.

மரக்கன்றுகள் நடுதல் மூலம் சுற்றுச் சூழலையும், மாசு படுதலைத் தடுத்தல் மூலம் வாழ்வுயிரிகளை காத்தலும் இளைய சமுதாயத்தின் கடமையாகும் என வலியுறுத்தினார். மாணவிகளின் கண்கொள்ளாக் கலைநிகழ்ச்சிகள் மாணவ, நடந்தேறின. முடிவில் மெட்ரிக் பள்ளி முதல்வர் வெண்ணிலா அனைவருக்கும் நன்றி கூறினார். விழாவில் பள்ளி முதல்வர்கள் கோபால், ஜெயசித்ரா மற்றும் துணை முதல்வர்கள் தவச்செல்வி, மேரி ஆகியோரும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என ஏராளமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கண்டுகளித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கோடை விடுமுறை கால வழக்குகளை விசாரிக்க 29 நீதிபதிகள் நியமனம்

# இந்திய பொருளாதாரம் இந்த நிதியாண்டில் வளரும் ஐஎம்எஃப் கணிப்பு





# கிண்டி மருத்துவமனையை திறந்து வைக்க குடியரசுத் தலைவர் தமிழகம் வருகிறார்


சென்னை / புதுக்கோட்டை | 29.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

29.04.2023 சனி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ரவி வர்மா , இந்திய ஓவியர் (பி.1848) (இ.1906)



பாரதிதாசன் , தமிழகக் கவிஞர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1891) (இ.1964)



குருதத்த வித்யார்த்தி , இந்திய சமூக சேவகர், ஆரியசமாசத்தின் தலைவர் (பி.1864 (இ.1890)



திமிலை மகாலிங்கம் , ஈழத்து எழுத்தாளர் (பி.1938) (இ.2010)



## இன்றைய நினைவு நாள்

அனகாரிக தர்மபால , இலங்கை பௌத்த துறவி, சிங்கள-பௌத்த தேசியவாதி (பி.1864) (இ.1933)



கோபுலு , தமிழக ஓவியர் (பி.1924) (இ.2015)



இர்பான் கான் , இந்திய நடிகர் (பி.1967) (இ.2020)



வேதிப் போரில் பாதிக்கப்பட்டோருக்கான நினைவு நாள் (ஐநா)